**Starting time 12.55 P.M.**

## <u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>

**O.S. No.248/2001**

Deposition of **D.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A.Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 08.01.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : சின்னப்பன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : எனது தகப்பனார் துக்கா கவுண்டரும், பெருமாள் கவுண்டரும் நண்பர்கள் என்றால், ஆமாம். எனது தகப்பனாரின் நண்பர் பெருமாள் செட்டியாரா அல்லது பெருமாள் கவுண்டரா என்றால், பெருமாள் செட்டியார். அவர் சுதந்திர போராட்ட வீரரா என்றால், தெரியாது. பிரமாண வாக்குமூல சங்கதிகளை நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது என்றால், ஆமாம். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பெருமாள் செட்டியார் சுதந்திர போராட்ட தியாகி என்று நான் தான் சொல்லியுள்ளேன் என்றால், நான் அது போன்று சொல்லவில்லை.

2. என் தகப்பனாரின் நண்பர் பெயர் பெருமாள் கவுண்டர் என்று நான் சொல்லவில்லை என்றால், ஆமாம். சுதந்திர போராட்ட தியாகிகளுக்காக ஒதுக்கப்பட்ட சொத்து பெருமாள் கவுண்டருக்கு ஒதுக்கப்பட்டதா, பெருமாள் செட்டியாருக்கு ஒதுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. அந்த சொத்தை எனது தகப்பனார் பெருமாள்

செட்டியாரிடம் இருந்து வாங்கினாரா, பெருமாள் கவுண்டரிடம் இருந்து வாங்கினாரா என்றால், பெருமாள் செட்டியாரிடம் இருந்து வாங்கினார்.

3. தாவா சொத்து தமிழக அரசால் பெருமாள் கவுண்டருக்கு அவர் சுதந்திர போராட்ட தியாகி என்பதால் ஒதுக்கப்பட்டதாக நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. பெருமாள் செட்டியாரிடமிருந்தா அல்லது பெருமாள் கவுண்டரிமிடமிருந்தா எனது தகப்பனார் சொத்தை பெற்றார் என்பது குறித்து நான் முன்னுக்கு பின் முரணான சங்கதிகளை கூறுவதால் 1966-லிருந்து நான் சொத்தின் சுவாதீனத்தில் இருப்பதே தவறானது என்றால், சரியல்ல.

4. 1966-ல் எனக்கு சிறு வயது என்றால், ஆமாம். அந்த சமயத்தில் என் தகப்பனார் குத்தகைக்கு ஓட்டினாரா, சொந்தமாக ஓட்டினாரா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரியல்ல, சொந்தமாக ஓட்டினார். 1966-லிருந்து என் தகப்பனார் குத்தகை தாரர் என்ற வகையில் ஓட்டி வந்தார் என்றாலும், சொந்தமாக ஓட்டவில்லை என்றாலும் சரியல்ல. குத்தகை காலம் முடிந்தவுடன் எனது தகப்பனார் இடத்தை காலி செய்துவிட்டார் என்றாலும், நான் தொடர்ந்து தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வந்ததாக பொய்யாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

5. 1966-லிருந்து செலவு செய்து தாவா சொத்தை சீர்திருத்தம் செய்ததாக நான் கூறுவதே பொய் என்றால், நான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்ததே இல்லை என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ-1ல் தாவா சொத்தின் புல எண் எதுவும் குறிப்பிடபடவில்லை என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.2 தாவா சொத்து சம்மந்தப்பட்டதுதான் என்பதற்கான குறிப்பு எதுவும் இல்லை என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ-3 லும் தாவா சொத்து சம்மந்தப்பட்டதுதான் என்பதை காட்டுவதற்கான

குறிப்பு எதவும் இல்லை என்றால், சரியல்ல.

6. பி.வா.சா.ஆ.4 தாவா சொத்து சம்மந்தப்பட்டதுதான் என்பதற்கான குறிப்பு எதுவும் இல்லை என்றால், காட்டில் கட்டப்படடதற்கான வீட்டிற்கானது தான் அது. பி.வா.சா.ஆ.5-லும் அறிவிப்பு எந்த சொத்து சம்மந்தமாக அனுப்பப்பட்டுள்ளது என்ற விவரம் எதுவும் இல்லை என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் தாவா சொத்து சம்மந்தப்பட்டது அல்ல என்றால், சரியல்ல. நான்தான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்தேன் என்பதை காட்டுவதற்காக வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், பட்டா எதுவும் இல்லை, சொசைட்டி அட்டையும் வாக்காளர் அடையாள அட்டையும் உள்ளது.

7. நான் தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்திருந்தால் அது சம்மந்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், நான் தாவா சொத்தில் அனுபவத்தில் இல்லை என்றால், சரியல்ல, நான் தான் அனுபவத்தில் இருக்கிறேன். நான் தாவா சொத்தின் மீது கோரியுள்ள எதிரிடை அனுபவம் சம்மந்தமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. நான் எந்த தேதியிலிருந்து தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்து வருகிறேன் என்றால், தேதி தெரியாது, 15 வருடமாக இருக்கிறேன். என்னுடைய பதிலுரையில் 1966-லிருந்து தாவா சொத்தில் அனுபவத்தில் இருப்பதாக கூறிவிட்டு தற்போது அதற்கு முரணாக 15 வருமாக இருப்பதாக கூறுவதால் என்னுடைய வழக்கே ஏற்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

8. வாதிகள் முறையாக கிரயம் பெற்று வருவாய் துறை ஆவணங்களை அவர்களது பெயரில் மாற்றி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும், தாவா சொத்தை என்னால் கிரயம் பெற இயலவில்லை என்பதாலும் வேண்டுமென்றே எதிரிடை அனுபவம் கோரி வாதிகளின் சுவாதீனத்தில் இடையூறு ஏற்படுத்துகிறேன் என்றால், சரியல்ல. எனவே நான்

கோரியுள்ள எதிரிடை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

பிரதிவாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 01.22 P.M.

ஒப்பம்/- என்.திலகேஸ்வரி
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.